## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததற்கிணங்க

# நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு அறிக்கை - கால அவகாசம் நீட்டிப்பு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து "கள ஆய்வு" செய்வதற்காக 38 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழுவானது, மாவட்டத்திற்குட்பட்ட தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு அனைத்துமட்ட கழக நிர்வாகிகளை நேரடியாக சந்தித்து கருத்துகளையும் அவர்களின் பரிந்துரைகளையும் பெற்று கள ஆய்வு அறிக்கையை ஜூன் 5ஆம் தேதிக்குள் கழகத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்திருந்தோம்.

தற்போது ஆய்வுக்குழுவினர் கழகத் தலைவர் அவர்களிடம் காலஅவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று கோரியதின் அடிப்படையில் வரும் ஜூன் 10ந் தேதி கள ஆய்வு அறிக்கையினை சமர்ப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள் : 28.05.2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., இரா.ஸ்ரீதரன், பெ.சு.தி.சரவணன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், க.சௌந்தரராசன், சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஸ்குமார், டி.திலீப்குமார், செல்வபிரகாஷ், ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட பலர் உள்ளனர்.

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால்

# இந்தியா முழுக்க எரிசக்தி தட்டுப்பாடு!

## நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மே 30 -

தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கடந்த 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் எரிசக்தி சேமிப்பு குறித்து கேள்வி எழுப்பியதை சுட்டிக்காட்டியுள்ளார்.



அதில், இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் வெறும் 10 நாட்களுக்கு மட்டுமே பெட்ரோலியப் பொருட்களை இருப்பு வைத்திருப்பது கவலைக்குரியது என தான் கூறியதை எடுத்துரைத்துள்ளார்.

அப்போது இது குறைவான கையிருப்புதான் என்பதை ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டதாக குறிப்பிட்டுள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி., கடந்த 2 ஆண்டுகளாக பெட்ரோலிய கையிருப்பை அதிகரிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டியுள்ளார்.

உலக அளவில் சிக்கல்கள் அதிகரித்து வரும் நிலையில், பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைப்பதை விரிவுப்படுத்தும் பணி மிக மெதுவாக நடைபெறுவதாகவும், நீண்டகால திட்ட மிடல் மற்றும் எரிசக்தி பாதுகாப்பில் அலட்சியம் காட்டப்படுவதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மோடி ஆட்சியில் வெற்று பேச்சுகளும், பொய் பித்தலாட் டங்களும், தாமதங்களும் மட்டுமே நடைபெற்று வருவதாக கனிமொழி கருணாநிதி எம்.பி. விமர்சித்துள்ளார்.

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை வெகு விமரிசையாக கொண்டாட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் வேண்டுகோள்!

திருவள்ளூர் மே 29:-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றியம், நகரம், பேரூர் கழகங்களில் கழகத்தினர்கள் சிறப்பான முறையில் விழாவை கொண்டாட வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக நீதி கொள்கைக்கும் மிகப்பெரிய பங்காற்றிய தலைவர். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கிய சட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தை, தமிழ் மொழிக்கான செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தது, மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் உள்ளிட்ட எண்ணற்ற சாதனைகளை தமிழகத்திற்கு வழங்கியவர் கலைஞர்.



அவரது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழக இந்நாள் மற்றும் முன்னாள் பொறுப்பாளர்கள், மூத்த முன்னோடிகள் அனைவரும் தங்களது பகுதிகளில் கழகக் கொடியேற்றி, தோரணங்கள் அமைத்து விழாவை வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்.

மேலும் ஏழை, எளிய மக்களுக்கு பயன்படும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், பல்வேறு காப்பகங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் உள்ளிட்ட சமூக நலப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் மற்றும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டிற்காக செய்த முக்கிய சாதனைகளை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எனவே கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை மக்கள் மத்தியில் சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்று மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாநகர பொது உறுப்பினர்கள். கூட்டம் மாநகர அவை தலைவர் கே.ஏ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர். க. சுந்தர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு ஆறுமுகம், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், திருமதி நித்யா சுகுமார் உள்ளிட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## 'முதல்வரே பல்கலைக்கழக வேந்தர்' என்ற தி.மு.க. அரசின் நடைமுறையைப் பின்பற்றும் கட்டாயம் கிடையாது – என்ற

# த.வெ.க. அரசின் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதனுக்கு கண்டனம்!

## திருவண்ணாமலை இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்; முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, மே 30-

மாநில சுயாட்சிக்கு எதிராக, தமிழக முதல்வரே பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்ற தி.மு.க. அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு கிடையாது என்கிற, த.வெ.க. அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் அவர்களின் அறிவிப்பை தி.மு.க. இளைஞர் அணி கண்டிக்கிறது என்கிற பல்வேறு தீர்மானங்கள், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

28.05.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என். அண்ணாதுரை தலைமை வகித்தார்.

மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலிப்குமார், செல்வம்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் மற்றும் இளைஞரணி ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. சட்டமன்ற கட்சியின் தலைவராக, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், துணைத் தலைவராக கே.என்.நேரு அவர்களையும், கொறடாவாக எ.வ.வேலு அவர்களையும், செயலாளராக தங்கம் தென்னரசு அவர்களையும், பொருளாளராக எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களையும், துணை கொறடாவாக கோ.வி. செழியன் அவர்களை தேர்ந்தெடுத்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்களை வெற்றிபெற வைத்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் இந்த மாவட்ட கழகம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

அதேபோல் வந்தவாசி தொகுதியில் எஸ்.அம்பேத்குமார் அவர்களை வெற்றி பெற வைத்தமைக்கும், இந்த கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!**

நவீன தமிழகத்தை கட்டமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலஉதவிகளோடு வருடம் முழுவதும், முத்தமிழஞர் கலைஞர் பிறந்த நாள் கொண்டாடுவதென இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்த் தாய் வாழ்த்தை மூன்றாமிடத்திற்கு தள்ளியதோடு மட்டுமல்லாமல் விஜய் அரசு தேர்தல் வாக்குறுதியில் இரண்டரை ஏக்கர் விவசாய நிலம் வைத்திருப்பவர்களுக்கு முழு கடன் தள்ளுபடி என்றும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள், வங்கியில் வாங்கிய கடனில் 50 சதவீதம் தள்ளுபடி செய்வதாக கூறிவிட்டு, வெற்று அறிவிப்புகள் கொடுத்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் ஜோசப் விஜய் அரசை இந்த கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

மீண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட, சட்டமன்ற கழக கொறடா எ.வ.வேலு அவர்களின் தலைமையில் நமது மாவட்ட இளைஞர் அணி உண்ணாமல், உறங்காமல், ஓய்வுகொள்ளாமல் பணியாற்றுவதென தீர்மானிக்கிறது.

பல்கலைக் கழகத்திற்கு வேந்தர்களாக, அம்மாநில முதல்வர்களே இருக்கலாம் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றியும், ஆளுநர் ஒப்புதலோடு, இந்திய நாட்டின் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதோடுமட்டுமல்லாமல் உச்சநீதிமன்றத்தின் மூலம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளும் கிடைத்து, இந்திய நாடே கொண்டாடியது.

ஆனால், தற்போது, புதிய மாநில அரசு, மாநில சுயாட்சிக்கு எதிராக, தமிழக முதல்வரே பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற தி.மு.க. அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு கிடையாது என்கிற, த.வெ.க. அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் அவர்களின் அறிவிப்பிற்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி வன்மையாக கண்டிக்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், அமைப்புசாரா தொமுச., ஏ.ஏ.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

செங்கம் நகர செயலாளர் மு.அன்பழகன், பேரூர் செயலாளர்கள் சி.கே. அன்பு, ப.முருகையன், எம். சீனுவாசன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா. ஷெரீப் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறினார்.



முன்னாள் ஒன்றிய அமைச்சரும், கழகத்தின் துணை பொதுச் செயலாளருமான ஆ.ராசா எம்.பி, பட்டவர்த்தியில் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், அகில இந்திய தொ.மு.ச. பேரவை பொது செயலாளருமான மு.சண்முகம் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்து உடல் நலம் விசாரித்தார். அருகில் மாவட்ட செயலாளர்கள், துரை.சந்திரசேகர், சாக்கோட்டை க.அன்பழகன், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் வீ.ஜெகதீசன் மற்றும் பந்தல் சிவா, பாண்டியன் (தொமுச பேரவை துணை தலைவர்), பெரும்பாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.கே.பாஸ்கர் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.